தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராயர்சாலை, (ஆலையம்மன் கோவில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு,
தேனாம்பேட்டை-600 018. தொலைபேசி எண்.243447590

**ஆணை நாள் 12.11.2020**

**முன்னிலை**

**திரு ரா.ராஜகோபால், இ.ஆ.ப., (ஓ)**
**மாநில தலைமைத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண்.SA 12654/SCIC/2019**

திரு V.K.ரவிகுமார் -- மேல்முறையீட்டாளர்

/எதிர்

பொதுத் தகவல் அலுவலர் /
தலைமை எழுத்தர்,
உதவி ஆணையர் அலுவலகம்,
இந்து சமய அறநிலையத் துறை,
சென்னை-34. .. பொது அதிகார அமைப்பு

## ஆணை

மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன் கீழ் 16.09.2019 தேதியிட்டு அனுப்பிய மனுவில், முதன்மை செயலாளர் / ஆணையர் ந.க.எண்.25050/2018/ஆர்2 நாள் 25.06.2019-ல் எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து தகவல் கோரியுள்ளார். அதன்பின்னர் மனுதாரர் 19(1)-ன்கீழ் 16.11.2019 தேதியிட்டு முதல் மேல்முறையீட்டு மனுவை அனுப்பியுள்ளார். அதன்பின்னர் 16.12.2019 தேதியிட்டு பிரிவு 19(3)-ன் கீழ் ஆணையத்திற்கு இரண்டாம் மேல்முறையீட்டு மனுவை அனுப்பி, தான் கோரிய தகவல்கள் வழங்கப்படவில்லை என்று தெரிவித்து அவற்றைத் தனக்குப் பெற்றுத்தருமாறு கேட்டுள்ளார்.

2. அதன்பேரில் மேற்சொன்ன இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீது இவ்வாணையத்தால் ஏற்கனவே 15.06.2020-ல் பிறப்பிக்கப்பட்ட ஆணையில், மனுதாரர் கோரும் தகவல்களை மனுதாரருக்கு

வழங்குவதற்கு கடைசி வாய்ப்பாக 25.06.2020-க்குள் வழங்குமாறு இந்து சமய அறநிலையத்துறையின் இணை ஆணையர் அலுவலக பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டிருந்தது.

3. அதன்பின்னர் வழக்கின் விசாரணை 14.09.2020 அன்று நடத்தப்பட்டது. விசாரணையில் மனுதாரர் ஆஜராகவில்லை. பொதுத் தகவல் அலுவலர், ஆணையத்தின் ஆணையானது, இணை ஆணையர் அலுவலகத்தில் பெறப்பட்டு, பின் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(3)-ன்கீழ், தங்கள் அலுவலகத்துக்கு மாற்றம் செய்யப்பட்ட கடிதம் வந்து சேரவில்லை என்று குறிப்பிட்டார். அதன் நகல் இணையம் வழியாக அனுப்பப்பட்டு, மனுதாரருக்கு அனைத்துத் தகவல்களையும் வழங்குவதற்கு 10 தினங்கள் கால அவகாசம் வழங்கி, வழக்கின் விசாரணை 29.09.2020-க்கு ஒத்தி வைக்கப்பட்டது.

4. அதன்பின்னர் வழக்கின் விசாரணை 29.09.2020 அன்று நடத்தப்பட்டது. விசாரணையின் போது பொதுத் தகவல் அலுவலர் அனைத்துத் தகவல்களையும் வழங்கியுள்ளதாகத் தெரிவித்தார். சில குறைபாடுகள் இருப்பதாக ஆணையம் கருதுவதால், அவற்றை சரி செய்து உரிய பதில் வழங்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்க அறிவுறுத்தப்பட்டு, வழக்கின் விசாரணை 15.10.2020-க்கு ஒத்தி வைக்கப்பட்டது.

5. அதன்பின்னர் வழக்கின் விசாரணை 15.10.2020 அன்று நடத்தப்பட்டது. விசாரணையில் மனுதாரர் ஆஜராகவில்லை. விசாரணையின் போது பொதுத் தகவல் அலுவலர், குறைபாடுகள் நீக்கி அனைத்துத் தகவல்களையும் பதிவஞ்சலில் வழங்கியுள்ளதாகத் தெரிவித்தார். அதன்பின்னர் பொதுத் தகவல் அலுவலர் வழங்கிய பதில்களில் ஏதேனும் குறைபாடுகள் இருந்தால், மனுதாரர் 30.10.2020-க்குள் ஆணையத்திற்குக் கடிதம் அனுப்பலாம் என்று தெரிவித்து, பொதுத் தகவல் அலுவலர் வழங்கிய பதில்களை இணைத்து ஆணை அனுப்பப்பட்டது.

6. மேலே குறிப்பிட்டுள்ள தமிழ்நாடு தகவல் ஆணையத்தின் ஆணையின்பால் மனுதாரரின் கவனம் ஈர்க்கப்படுகிறது. அந்த ஆணையில் மேற்கூறப்பட்ட வழக்கில் பொதுத் தகவல் அலுவலர் வழங்கிய பதில்களில் ஏதேனும் குறைபாடுகள் இருந்தால், ஆணையத்திற்குத் தெரிவிக்குமாறு பணிக்கப்பட்டிருந்தார். (இணைப்பு). அதன்பின்னர், பல நாட்களாகியும்

வரப்பெற்ற தகவல்கள் சம்மந்தமாக மனுதாரரிடமிருந்து எந்தவொரு ஆட்சேபணையும் தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் 12.11.2020 வரை பெறப்படாத காரணத்தால், மனுதாரரின் வழக்கு முற்றாக்கி ஆணையிடப்படுகிறது.

**ஒம்/- (ரா. ராஜகோபால்)**
**மாநில தலைமைத் தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

<u>வழக்கு எண். SA 12654/**SCIC/2019**</u>

**பெறுநர்**

<u>பொது அதிகார அமைப்பு</u>

பொதுத் தகவல் அலுவலர் /
தலைமை எழுத்தர்,
உதவி ஆணையர் அலுவலகம்,
இந்து சமய அறநிலையத் துறை,
சென்னை- 600 034.

<u>மனுதாரர்</u>

திரு V.K.ரவிகுமார்,
த/பெ. A.குப்புசாமி,
எண்.1/237, பிள்ளையார் கோயில் தெரு,
விளாங்காடுபாக்கம் அஞ்சல், (வழி செங்குன்றம்)
சென்னை-600 052.

*PR/PS 16/11/2020*

௨

அருள்மிகு இரவபுரீஸ்வரர் திருக்கோயில்
நாரவாரிக்குப்பம், சென்னை - 52.

அனுப்புநர்
சி. ராதாமணி
தக்கார் / செயல் அலுவலர்

பெறுநர்.
உதவி ஆணையர் அவர்கள்
இந்துசமய அறநிலையத் துறை
சென்னை - 34.

நாள் : 21.09.2020

அம்மையீர்,

பொருள் : தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் தகவல் வழங்குதல் - அருள்மிகு இரவபுரீஸ்வரர் திருக்கோயில் நாரவாரிக்குப்பம், சென்னை - தொடர்பாக

பார்வை : திரு. V.K. ராஜ்குமார் அவர்கள் மனு.

பார்வையில் காணும் மனுவில் இணை ஆணையர் அவர்களால் எடுக்கப்பட்ட நடவடிக்கை விவரம் வேண்டியுள்ளார். இணை ஆணையர் அவர்கள் உத்தரவின்படி 25.4.2019 அன்று இந்துசமய அறநிலையத்துறை கண்காணிப்பாளர் (ஆய்வு), கிராம நிர்வாக அலுவலர் மற்றும் திருக்கோயில் தக்கார் / செயல் அலுவலரால் தள ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அதில் மேற்படி இடத்தில் திருக்கோயில் தேர் நிறுத்தும் இடமாக இல்லை என அறிக்கை சமர்பிக்கப்பட்டுள்ளது. மேலும் மேற்படி இடத்தில் மதில் சுவர் கட்டுவதை ஆட்சேபித்து மனுதாரர் தொடர்ந்த வழக்கு W.P. No : 7737/2018 மற்றும் WPMP 838 of 2019-ல் மனுதாரர் மேற்படி இடம் தனக்கு

மேற்படியாரது கேட்டுள்ள ஆவணங்கள் எதுவும் சமர்ப்பிக்காத காரணத்தால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்கிற விவரம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

இணைப்பு: சான்றிட்ட-1.

அடங்கல் நகல்-1

FMB நகல் - 3.

WP.No 7737 of 2019 and WMP 8381 of 2019 உத்தரவு நகல்

21/9/2020

தனி/வட்டாட்சியர்

## சான்றிதழ்

பொருள் : திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம், விளாங்காட்டுப்பாக்கம் கிராமம் அருள்மிகு சொர்ணாம்பிகை உடனுறை அருள்மிகு இலவபுரீஸ்வரர் திருக்கோயிலுக்கு சொந்தமான இடம் அளவுப் பணி மேற்கொள்ளுதல் - தொடர்பாக.

பார்வை : இந்து சமய அறநிலையத்துறை இணை ஆணையர் செ.மு.ந.க.எண்.1216/2018/ அ3 நாள் : 02.03.2018

*******

பார்வையில் காணும் இணை ஆணையர் அவர்களின் உத்திரவின்படி அருள்மிகு அகத்தீஸ்வரர் திருக்கோயிலுக்கு சொந்தமான இடங்களை அளவுப்பணி மேற்கொள்ள உத்திரவிடப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து கோயில் நிர்வாக அலுவலர் கட்டுப்பாட்டில் உள்ள திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரி வட்டம் விளாங்காட்டுப்பாக்கம் அருள்மிகு சொர்ணாம்பிகை உடனுறை அருள்மிகு இலவபுரீஸ்வரர் திருக்கோயிலுக்கு சொந்தமான இடத்தை அளவுப் பணி மேற்கொள்ள கேட்டுக் கொண்டார்.

திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம் கிராம எண்.4 விளாங்காட்டுப்பாக்கம் கிராமம் மற்றும் விளாங்காட்டுப்பாக்கம் ஊராட்சிக்குட்பட்ட அருள்மிகு சொர்ணாம்பிகை உடனுறை அருள்மிகு இலவபுரீஸ்வரர் திருக்கோயில் அமைந்துள்ள பழைய கிராம நத்தம் புல எண். 327/3ல் புதிய சர்வே எண். 766/5,6,765/1 ஆகிய இடங்கள் அளவுப்பணி 25.04.2019 அன்று கோயில் நிர்வாக அலுவலர் திரு.கோ.ஜெயப்பிரகாஷ் நாராயணன், கிராம நிர்வாக அலுவலர் திரு.சேகர், கோயில் எழுத்தர். திரு.கே.இராஜேந்திரன் மற்றும் ஊர் பொதுமக்கள் முன்னிலையில் இந்து சமய அறநிலையத்துறை நில அளவையர் (ஓய்வு)த.சுகுமார் அவர்களைக் கொண்டு கோயிலின் சுற்றுப்புற மதில்சுவர் கட்டுவதற்கு கிராம கணக்கு ஆவணப்படி அளவுப்பணி மேற்கொள்ளப்பட்டது.

மேற்படி திருக்கோயிலுக்கு பாதுகாப்பு சுவர் கட்டுமானம் மேற்கொள்வதில் திருக்கோயிலுக்கு சொந்தமான புல எண்கள் தவிர தனி நபர்களின் இடங்கள் ஏதுமில்லை என இதன் மூலம் சான்றளிக்கப்படுகிறது.

25/4/19
த.சுகுமார்
நில அளவையர் (ஓய்வு)
இந்து சமய அறநிலையத்துறை
சென்னை - 600 034.

25/4/19 VAO
கிராம நிர்வாக அலுவலர்
விளாங்காட்டுப்பாக்கம் கிராமம்
பொன்னேரி வட்டம், திருவள்ளூர் மாவட்டம்

25/4/2019
செயல் அலுவலர்
அருள்மிகு சொர்ணாம்பிகை உடனுறை
அருள்மிகு இலவபுரீஸ்வரர் திருக்கோயில்,
விளாங்காட்டுப்பாக்கம் கிராமம், பொன்னேரி
வட்டம், திருவள்ளூர் மாவட்டம்


VILANGADUPAKKAM

வட்டம் : அம்பத்தூர்　　　　　கிராம எண் : 26

புல எண் : 327/0　766　　　　　பெயர் : விளாங்காடுபாக்கம்

பரப்பு ஹெக்டேர்: ஏர்: 0.56.5




766/1 - 0.0091
2. 0.0061
3 - 0.0850
4 - 0.1430
5 - 0.2685
6 - 0.0240
7 - 0.0293
0.56.5

| | | | | |
|---|---|---|---|---|
| | | E (111.8) | | |
| | | 86.6 | 52.4 | F |
| | | 85.6 | 19.0 | 4 |
| D | 28.6 | 67.4 | | |
| 3 | 4.8 | 67.2 | | |
| | | 61.0 | 22.8 | 2 |
| | | 58.2 | 8.4 | 1 |
| C | 38.6 | 54.4 | | |
| D1 | 18.4 | 50.2 | | |
| B | 45.0 | 49.3 | | |
| D1 | 19.8 | 48.6 | | |
| D1 | 10.8 | 46.5 | | |
| D1 | 12.4 | 44.8 | | |
| D1 | 13.8 | 43.2 | | |
| [illegible] | 50.8 | 38.6 | | |
| D1 | 16.2 | [illegible] | | |

அளவு 1 : 500 மீம்

327/N 765 பரப்பு ஹெக்டேர்: ஏர்: 0-37




அளவு 1 : 500 மி.மீ